முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1083

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.09.2022, வெள்ளிக்கிழமை

1. ஏழாம் படைவீடு படைத்த ஞானியே
ஏழ்மையை உலகிலிருந்து விரட்ட அவதாரம் புரிந்த
காலனையும் வென்ற மாதவராஜனே
கருணைமிகுந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 31 நாள், 16.09.2022 வெள்ளிக்கிழமை)
வரமென உன்னோடு ஆறுமுகன் யான்
வல்லமை கூட்டி உடனிருந்து உலகோர்க்கு அருள
3. அருளுகின்ற உன் பிரணவக்குடில் தான்
அகிலத்தை காக்கும் ஞானக்குடிலாகும்
தருகின்ற உன் அருளமுது தான்
தரணியோரின் பசிபிணி பிறசோடைகளை அகற்றும் அருமருந்தாகும்
4. ஆகவே அரங்கன் தடத்தில் ஆறுமுகன் யான்
அற்புதத்தை நிகழ்த்தி வர
வரமென உலகோர் ஞானம் வேண்டியும்
வாழுங்காலத்தில் என்னருள் காட்சிப்பெறவேண்டியும்
5. வேண்டியே உலகோர் தொடர்ந்து வந்தால்
வினவிட தொடருகின்ற கர்மவினை அகன்று
இணையிலா அரங்கன் அருளாசியாலே
என்னருள் காட்சி பெற்று நிலைபெற நேரும்
6. நேர்மைகொண்ட அரங்கன் தர்மத்தையும்
நீதிவழுவாத அரங்கனின் உபதேசத்தையும்
பெருமைபட உலகோர் ஏற்று
பிறதேசங்களும் அறியும் வண்ணம் பறைசாற்றி
7. வருமுலகில் தொடர்சேவை யாற்றிவர
இந்த வையகமே கலியிடர்களை வென்று கடந்து ஞானயுகமாற்றமாக
ஞானலோகவாழ்வு உலகோர் அடையும்வண்ணமும் ஞானிகளே ஆளக்கூடிய
ஞான ஆட்சி நிகழும் வண்ணம் அற்புதமும் ஆறுமுகன் யான் நடத்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–